கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர், திருவாரூர்.

மாநிலக்கணக்காயர், சென்னை–18/35,
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35(பெயரில்).

நகல்:
பொதுப்பணித்துறை, சென்னை–9
நிதித்துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஒப்பம் 5.4.2007
பிரிவு அலுவலர்.

5.4.07

NC 6759 / SR3744 / 2017

18/12/17
Research officer
Assistant Commissioner (IR)
Tamil Nadu Archives
Egmore, Chennai-600 008
12 . 2017

3/3

18/12/2017

Scanned by CamScanner

தலைமை அலுவலக வளாகத்தில் காட்சி அறை அமைக்க தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் மாநில அரசு மூலமாக 1.98 இலட்சம் அரசு கடன் தொகையாகவும் மற்றும் 1.98 இலட்சம் அரசு பங்கு மூலதனமாகவும், ஆக மொத்தம் ரூ. 3.96/–இலட்சம் வழங்கப் பட்டுள்ளது என்றும் கூட்டுறவுத் துறையின் கட்டுமானப் பிரிவு கலைக்கப்பட்டதால் பதிவாளரின் ஆணையின்படி, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையத்தின் தலைமை அலுவலக வளாகத்தில் காட்சி அறை அமைக்கும் கட்டுமானப்பணி பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப் பட்டதாகவும், அக்கட்டுமானப் பணிக்கு பொதுப்பணித்துறை நூற்றுவீதக் கட்டணம் 12 1/2% வீதம் ரூ.50,000/– கட்டும்படி கோரியுள்ளதாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் தனி அலுவலர் தெரிவித்துள்ளார் என்றும், அரசாணை நிலை எண்.14, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை நாள்.11.4.2001ல் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுமானப்பணிகளை பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் அக்கட்டிடப் பணிகளுக்கு நூற்றுவீதக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு ஆணையிட்டுள்ளது என்றும் குறிப்பிட்டு, கூட்டுறவுச் சங்கங்களால் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதியுதவியினைக் கொண்டு கட்டப்படும் கட்டுமானப் பணிகளுக்கும், அரசின் நிதியுதவி மற்றும் கடன் மூலம் கட்டப்படும் கட்டுமானப் பணிகளுக்கும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுமானப் பணிகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது போல் நூற்றுவீதக் கட்டணம் (Centage Charges) செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசாணை வழங்குமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. கூட்டுறவுத்துறையின் கட்டுமானப்பிரிவு மேற்கொள்ளும் கட்டுமானப் பணிகளுக்கு முழுவதும் விலக்களிப்பதற்கு பதிலாக, கட்டுமானப்பிரிவு கலைக்கப்படுவதற்கு முன் செலுத்திய கீழே குறிப்பிடப்பட்டவாறு நூற்றுவீதக் கட்டணத்தை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் பொதுப்பணித்துறைக்குச் செலுத்த அரசு ஆணையிடுகிறது.

| வ. எண். | கட்டுமானப் பணியின் மதிப்பு | நூற்றுவீதக் கட்டணம் |
|---|---|---|
| 1 | ரூ.1/– இலட்சத்துக்கு குறைவாக | 1% |
| 2 | ரூ.1/– இலட்சம் முதல் ரூ.5/– இலட்சம் வரை | 2% |
| 3 | ரூ.5/– இலட்சத்துக்கு மேல் | 3% |

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.17917/Fin(C.F.&C.P) Department/2007, நாள்.23.3.2007–ன் இசைவுடன் வெளியிடப் படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மச்சேந்திரநாதன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
தனி அலுவலர், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், சென்னை–18.
தலைமைப்பொறியாளர் (கட்டிடம்), சேப்பாக்கம், சென்னை–5.

Scanned by CamScanner

சுருக்கம்

கூட்டுறவு – கூட்டுறவுச் சங்கங்களுக்கான கட்டுமானம் – பொதுப்பணித்துறை மூலம் கட்டுதல் – நூற்றுவீதக் கட்டணம் செலுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(சிஎப்2) துறை

அ.ர.ஆணை (நிலை) எண்.101 நாள்:30.3.2007.

படிக்கப்பட்டவை

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடித
எண்.93306/2005/கிக1, நாள்.18.11.2005.

---

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கீழ் இயங்கிவந்த கட்டுமானப்பிரிவு அரசாணை நிலை எண்.184, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள். 18.5.2003இன்படி கலைக்கப்பட்டு, கட்டுமானப்பிரிவில் பணிபுரிந்த அனைத்துப் பணியாளர்களும் பொதுப்பணித்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டு விட்டனர் என்றும் கூட்டுறவுத் துறையின் கீழ் கட்டுமானப்பிரிவு செயல்படும்பொழுது அரசாணை (வாலையம்) எண்.549, கூட்டுறவுத் துறை, நாள்.4.10.1977ன்படி, கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் கட்டுமானப்பிரிவு மேற்கொள்ளும் கட்டுமானப் பணிகளுக்கு கீழ்க்கண்டவாறு கூட்டுறவுச் சங்கங்கள் நூற்றுவீதக் கட்டணம் செலுத்தின என்று கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தெரிவித்துள்ளார்:-

| வ.எண். | கட்டுமானப் பணியின் மதிப்பு | நூற்றுவீதக் கட்டணம் |
|---|---|---|
| 1 | ரூ.1/- இலட்சத்துக்கு குறைவாக | 1% |
| 2 | ரூ.1/- இலட்சம் முதல் ரூ.5/- இலட்சம் வரை | 2% |
| 3 | ரூ.5/- இலட்சத்துக்கு மேல் | 3% |

2. தற்போது கூட்டுறவுத் துறையின் கட்டுமானப் பிரிவு கலைக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் கட்டுமானப் பணிகள் பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு வருவதால் நூற்றுவீதக் கட்டணம் 12 1/2 % செலுத்தப்பட்டு வருகிறது என்றும், அரசாணை நிலை எண் 137, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 29.4.2002இல், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திருவாரூர்

Scanned by CamScanner